## முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்

## L.A.O.P.No.30/2023

## சாட்சியின் சான்றுரை CW-1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | ஸ்ரீதேவி | வட்டம் | - | |
| த/பெ | - | அப்பாண்டைராஜன் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

06.08.2024 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.

கோரிக்கைதாரர் சாட்சி 1 வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பார்வை அலுவலர் தரப்பில் குறுக்குவிசாரணை

ரச்சிதா என்பவர் என் அம்மா, மகாராஜன் என்பவர் என் அண்ணன். மகராஜன் என்பவர் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். அவருக்காக நான் சாட்சி சொல்கிறேன். இந்த சொத்து பூர்விகத்தில் தர்மசந்திரன் என்பவர் பெயரில் வாங்கப்பட்டது. ஜெய்கீர்த்தி என்பவர் என் தாத்தா. குடமாலை என்பவர் என் பாட்டி. ஜெய்கீர்த்தி பெயரில் சொத்து இருந்தது. நான் பிரமாணவாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். சொத்தின் சர்வே எண்.188/2. அதன் விஸ்தீரனம் 1744 சதுர மீட்டர் ஆகும். இந்த சொத்தில் 3 பேருக்கு உரிமை உள்ளது என்றால் சரிதான் அதில் தர்மசந்திரன், சம்பத் மற்றும் அப்பாண்டைராஜ் ஆவார்கள். தர்மசந்திரன் மற்றும் அவரது மனைவி பரிமலகாந்தி தற்போது உயிரோடு இல்லை. அவர்களது இறப்பு சான்றிதழும் வாரிசு சான்றிதழும் தாக்கல் செய்தோமா என்றால் இறப்பு சான்றிதழ் மட்டும் தாக்கல் செய்துள்ளது. சம்பத் என்பவர் தற்போது உயிரோடு இல்லை. அவர் மனைவி தனக்குமாரி மகள்கள் பத்மபிரியா, தர்மதேவி, மகன் ஜெயசந்திரன் அவர்தற்போது உயிரோடு இல்லை. அவர் மனைவி பெயர் ராஜபிரியா, அவரது குழந்தைகள் சௌமியா, திலகா ஆவார்கள்.

ஜெயசந்திரனின் இறப்பு சான்றிதழ் தாக்கல்செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. அப்பாண்டைராஜ் என் தந்தையார் அவர் மனைவி என் தாயார் ரஜிதா, அவரது மகன்கள் மகாராஜன், மகாபிரபு, மகள் ஸ்ரீதேவி ஆவார்கள். அதில் மகாபிரபு இறந்துவிட்டார். அவர் மனைவி பெயர் சுபத்ரா, குழந்தைகள் சுசானா, ஸ்னேகா ஆவார்கள். நில எடுப்பில் நாங்கள் பணம் வாங்கவில்லை. 8 பேரும் வாரிசுதாரர்கள் ஒன்றாக வந்து பணம் வாங்கிகொள்ள சொன்னார்கள். சம்பத்தின் வாரிசுதாரர்கள் எங்களுடன் வரவில்லை. அதனால் என் அண்ணன் மகாபிரபு நாங்கள் 8 பேரும் உரிமையானவர் அவர்களுக்கு பிரித்து கொடுங்கள் என்று கடிதம் எழுதினார். அதற்கு பிறகு அவர்கள் வரவில்லை காலதாமதம் ஆகிவிட்டதால் நீதிமன்றத்தில் பணத்தை கட்டுமாறு சொன்னோம். திண்டிவனம் நீதிமன்றத்தில் மாவட்ட உரிமை நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.103/2022 என்ற வழக்கை நாங்கள் தான் போட்டோம். அந்த வழக்கு வாரிசுதாரர்களை யாரென்ற விளம்புகை பரிகாரத்திற்காக தான் போடப்பட்டது. அது தற்போது நிலுவையில் உள்ளது. அந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது இந்த வழக்கில் வாரிசுதாரர்கள் யார் என்று உறுதிசெய்து அவர்களுக்கு உரிய பங்கை அளிக்க இயலாது என்று சொன்னால் சரியல்ல.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.